# 4

# குறிப்பு வினை பற்றிய ஒரு விசாரணை

- சி. சிவசேகரம்

## 1. இருப்பைக் குறிக்கும் வினைச்சொல்

வாக்கியங்கள் பொதுவாகப் பொருளையோ செயலையோ குறிப்பன. இங்கு, பொருளென்பது பண்டங்களை மட்டுமன்றிச் சீவராசிகளையும் உணர்வுகளையும் பண்புகளையுங் குறிக்கும். நிகழ்வென்பது எண்ணம் உட்படப் பல்வகைச் செயல்களை உணர்த்தும்.

ஒரு செயலைக் கூற வினைச்சொல் தேவை. ஒன்றின் இருப்பை உணர்த்த வினைச்சொல் கட்டாயமில்லை. எனினும், ஒரு பொருள் முன்னர் இருந்தது எனவோ இனி இருக்கும் எனவோ கூற ஒரு வினைச்சொல் தேவைப்படலாம்.

பெரும்பாலான ஐரோப்பிய மொழிகளில், ஒரு பொருளின் இருப்பைக் குறிக்கும் வினைச்சொல் (ஆங்கிலத்தில் is, am, are என்றவாறு) உள்ளது. அம் மொழிகளில், ஒரு பொருளைக் குறிக்கும் வாக்கியத்துக்கு அது அவசியம்.

சில ஐரோப்பிய மொழிகளில் (குறிப்பாக ரஷ்ய மொழியிலும் அதனோடு இணங்கிய மொழிகளிலும்) is, am, are என்பவற்றுக்குச் சமமான சொற்கள் இல்லை.

இந்திய மொழிகளில் is, am, are என்பவற்றுக்குச் சமமான சொற்கள் இல்லாவிடினும் ஒரு பொருளைக் குறிக்கும் வாக்கியங்களில் “ஆகும்” என்பதையொத்த சொல்லோ விகுதியோ உண்டு. சில விலக்குகள் போக, இருப்பை உணர்த்தும் நிகழ்கால வாக்கியங்களில் அவ்வாறான ஒரு சொல்லையோ விகுதியையோ பாவிக்கும் கட்டாயம் ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் உண்டு. தமிழ், தெலுங்கு, சிங்களம், வங்காளி ஆகிய மொழிகளில் அது இன்று பெருமளவுங் கட்டாயமில்லை.

இந்திய மொழிகளில் is, am, are என்பவற்றுக்குச் சமமான சொற்கள் இல்லாவிடினும் ஒரு பொருளைக் குறிக்கும் வாக்கியங்களில் “ஆகும்” என்பதையொத்த சொல்லோ விகுதியோ உண்டு.

வினைச்சொல்லற்ற ஒரு வாக்கியம் ஒரு பொருளைக் குறிக்கும்போது, அவ்வாக்கியம் நிகழ்காலத்தை உணர்த்தும். அல்லது அது அப் பொருளின் காலங்கடந்த அடையாளமாகும். இறந்தகாலத்திலோ எதிர்காலத்திலோ ஒரு பொருளின் இருப்பைக் கூறும் வாக்கியம், உரிய வினைச்சொல்லோ காலத்தைக் குறிக்குஞ் சொல்லோ இல்லா விடின், நிகழ்காலத்திலேயே விளங்கப்பெறும்.

## 2. தமிழிற் குறிப்பு வாக்கியம்

முற்கூறியவாறு, தமிழில் ஒரு பொருளை நிகழ்காலத்திற் குறிக்கும் வாக்கியங்கட்கு வினைச்சொல் தேவையில்லை. எனவே, இன்றைய தமிழ் வாக்கியத்தைக் குறிப்பு வாக்கியமெனவும் தெரிநிலை வாக்கிய மெனவும் வகுக்கலாம். பிற மொழிகளிலும் அவ்வாறு இயலும்.

தொல்காப்பியம் சொல்லதிகாரத்தில் வினையியற் செய்யுட்கள் *198*இற்கும் *248* இற்கும் இடையே உள்ள ஒன்பது செய்யுள்களில் வரும் "குறிப்பு" எனுஞ் சொல்லைத் தொல்காப்பியம் எங்கும் "குறிப்பு வினை" எனக் கூறவில்லை. குறிப்பு, வினை எனும் இரு சொற்களும் வெவ்வேறு பொருளுணர்த்துவன. கீழ்வரும் ஒரு இடத்தில் மட்டுமே தொல்காப்பியம் குறிப்பை வினைச்சொல்லோடு கருத இடமளிக்கிறது.

*__குறிப்பினும் வினையினும்__ நெறிப்படத் தோன்றிக்*
*காலமொடு வரூஉம் **வினைச்சொல்** எல்லாம்*
*உயர்திணைக்கு உரிமையும் அ∴றிணைக்கு உரிமையும்*
*ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்*
*அம் மூ உருபின தோன்றலாறே.* (தொல்; சொல். *201*)

"குறிப்பில் வரூஉம் வினைச்சொல்" குறிப்பு உணர்த்தும் வினைச்சொல்லைக் குறிக்குமென்பது பொருந்தும். தொல்காப்பியம் குறிப்பை நேரடியாக வினைச்சொல்லெனக் கூறுவதைத் தவிர்ப்பதைச் சில இலக்கண நூலாசிரியர்களேனும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, தொல்காப்பியத்திற்குப் பின் பாவனைக்கு வந்த குறிப்பு வினை, தெரிநிலை வினை எனுஞ் சொற்றொடர்கள் குறிப்பை வினைச் சொல்லாகக் கருதியதன் விளைவுகள் எனக் கருத இடமுண்டு.

ஒரு பொருளைக் குறிக்கும் பின்வரும் சமகால வாக்கியங்களிற் சிலவே தொல்காப்பியங் கூறும் குறிப்பு வாய்ப்பாட்டுள் வரும்.

1. அவன் நல்லன் (அல்லது நல்லவன்).
2. இவை வீடுகள்.
3. இது மட்டுநகர்.
4. இது நாம் போமிடம் (அல்லது போகுமிடம்).
5. இப்போது (நேரம்) பத்தரை.
6. ஞாயிறு ஓய்வுநாள்.
7. இது ஆசனப்பட்டி.
8. அது வீட்டுவாசல்.
9. யானை கரிது (அல்லது கரியது).
10. வையம் இனிது (அல்லது இனியது).
11. இது படிப்பு.
12. இது விளையாட்டு.

எழுவாய்க்கு ஏற்ற வினை விகுதி (அன், அள், அர், அது, அ) பெற்ற வினையல்லாத சொற்களையே வினையுடன் கருதும் குறிப்புகளாகத் தொல்காப்பியம் ஏற்கிறது. எனின் மேற்குறித்தவற்றுள் (1), (9), (10) இலக்கமிட்ட வாக்கியங்களே தொல்காப்பியக் காலத்துக் குறிப்பு வாக்கிய வகையுள் அடங்கும்.

அதற்குக் காரணம், வேற்றுமை விகுதிகளற்ற சில பெயர்ச் சொற்கள் தொல்காப்பியக் காலத்திலோ முன்போ ஆகும், ஆம், ஆவ, ஆவன், ஆவள், ஆவர் எனுமாறான வினை விகுதிகளைப் பெற்று வாக்கிய இறுதியில் வந்தமையாயிருக்கலாம். அதையொட்டித், தொல்காப்பியம் அன், அள், அர், அது, அ ஆகிய விகுதிகளை ஆவன், ஆவள், ஆவர், ஆவது, ஆவ என்பவற்றின் குறுக்கங்களாகவோ (பயனிலையாக வருமிடத்து) வினைப் பண்புடையனவாகவோ கொண்டது எனக் கருத இடமுண்டு.

எனினும், தொல்காப்பியக் காலத்துக்கு நெருங்கியதான "யாதும் ஊரே யாவருங் கேளிர்" எனும் புறநானூற்றுச் செய்யுள் வரியில் வரும் "யாவருங் கேளிர்" என்ற வாக்கியத்தில் "அன்" ஆதிய விகுதிகளில் எதுவும் புலப்படவில்லை.

## 3. குறிப்பு வினை எனுங் கோட்பாடு

தொல்காப்பியத்திற்குப் பின், வினைச்சொல்லற்ற குறிப்பு வாக்கிய வகைகள் பெருகின. இலக்கண நூல்கள் சில, பயனிலையாக அமையும் பெயர்ச்சொற்கள் பலதையும் குறிப்பு வினைகள் என வகுத்தன எனக் கி. சங்கர நாராயணன் விளக்குகிறார் (சங்கரநாராயணன், கி., 2018:65–74). பயனிலையாக அமையும் பெயர்ச்சொற்களைப் பெயர்ப் பயனிலை எனக் கொள்ளும் சமகால வழக்கை நு.்.மான் சுட்டுகிறார் (நு.்.மான், எம்.ஏ., 2013:114–117).

தொல்காப்பியத்திற்குப் பிற்பட்ட பழந்தமிழ் இலக்கியங்களில் வரும் குறிப்பு வாக்கியங்கள் சிலதைப் பார்ப்போம்:

திங்களுள் அளியும் **நீ;** அனைத்தும் **நீ** (பரிபாடல் 3: 67)

நாகபுரம் **இது** (மணிமேகலை 14: 169)

(வண்டு ஊசல் ஆடும்) புகாரே **எம்மூர்** (சிலப்பதிகாரம் 41-42)

திங்களுக்கருங்கலம் திகழும் **நீண்முடி** (திருநாவுக்கரசர் நமச்சிவாயப் பதிகம்)

அன்னையும் பிதாவும் **முன்னறி தெய்வம்** (கொன்றைவேந்தன்)

தடித்த எழுத்திலுள்ள குறிப்புச் சொல்லை "ஆவாய்" அல்லது "ஆகும்" அல்லது "ஆவர்" என்ற வினைச்சொல்லுடன் சேர்ப்பின் குறிப்பு வாக்கியம் தெரிநிலை வாக்கியமாகும். அதனால் வாக்கியத்தின் தன்மை மாறினும் பொருள் மாறாது.

குறிப்பு வினைகளை அடையாளங் காண்பதில் இலக்கண நூலாரிடையுள்ள முரண்களை நோக்கின், தமிழிற் "குறிப்பு வினை" எனுங் கருத்தாக்கத்திற் குழப்பமுள்ளது என்பது என் மதிப்பீடு.

எனின், குறிப்பு வாக்கியத்தைத் தெரிநிலை வாக்கியத்தினின்று வேறுபடுத்துவது எது?

வினைச் சொற்கள் காலமுணர்த்துவன எனின், ஒரு "குறிப்பு வினைச்சொல்" தன்னளவிற் காலமுணர்த்துமா?

குறிப்பு வினைகளை அடையாளங் காண்பதில் இலக்கண நூலாரிடையுள்ள முரண்களை நோக்கின், தமிழிற் "குறிப்பு வினை" எனுங் கருத்தாக்கத்திற் குழப்பமுள்ளது என்பது என் மதிப்பீடு. குறிப்பு வினை பற்றிய விரிவான விளக்கங்கள் பல உள்ள போதும், குறிப்பு வினை தமிழுக்கே சிறப்பான ஒரு அமைப்பு என்பதற்கப்பால் அது எவ்வாறு வினைச்சொல்லாகச் செயற்படுகிறது என்ற விசாரணையை நான் காணவில்லை.

உதாரணமாகப், பண்டிதர் க. வீரகத்தி (வீரகத்தி, க., *1984: 53*) தன் விளக்கத்திற் "தமிழ் மொழி வினைச்சொல் உலகில் குறிப்பு வினை ஒரு நரசிம்ம அவதாரம் ஆகும். மொழிக்குச் சுருக்கமும் செறிவும் தர, வலிவும் வனப்பும் உண்டாக்க நம் முன்னோர்கள் செய்துகொண்ட வினைச் சொல்லாக்க நுட்ப ஏற்பாடு இது எனலாம். கால எழுத்துகள் இன்றி, பெயரடிகள் பகுதிகள் ஆக, பால் எண் காட்டும் இலக்கணக் கூறுகள் விகுதிகள் ஆக முடிந்து நிற்கும் இவ் வினை அமைப்பு நமது மொழிக்கேயான சிறப்பியல்புகளில் முதன்மையானதாகும். குறிப்பு வினை தமிழ் மொழிக்கே உரிய தனித்துவமான ஓர் அமைப்பு எனவும், இவ்வகை அமைப்பை வேறு எந்த மொழியிலும் தாம் காணவில்லை எனவும் வீரமாமுனிவர் கூறுவர்" எனக் கூறியுள்ளார் (வீரகத்தி, க., *1984*). (எனினுங் 'குறிப்பு வினை தமிழ் மொழிக்கே உரிய தனித்துவமான ஓர் அமைப்பு' என்பது முற்றிலுஞ் சரியல்ல என ரஷ்ய நடைமுறை உணர்த்தும்.)

குறிப்பு வினை பற்றிய விளக்கங்களை விரிவாக விசாரித்த செ.வை. சண்முகம், "சொல்லியல் நிலையில் கால விகுதி ஏற்காமல் தெரிநிலை விகுதிகள் போல் இட விகுதிகளையும் எச்ச விகுதிகளையும் ஏற்பனவற்றையும் தொடரியல் நிலையில் குறிப்பாகப் புதைநிலையில் வினைச்சொற்களிலிருந்து கெட்டவையையும் வினைக் குறிப்பு வடிவங்களாகக் கொள்ள முடிகிறது" எனக் கூறுகிறார் (சண்முகம், செ.வை., *1992: 103*).

காலங்காட்டும் தன்மை மட்டும் இல்லாத வினை வடிவங்களைக் குறிப்பதற்கே நன்னூலார் வினைக் குறிப்பு என்ற கலைச்சொல்லை அமைத்தார் எனவும் காலத்தைக் குறிப்பால் உணர்த்துவதே குறிப்பு வினை எனவும் வினையைக் குறிப்பால் உணர்த்தலே குறிப்பு வினையின் இலக்கணம் எனவும் வாதிப்போர் ஒருபுறமிருக்க, ஆக்கப் பெயர்களதும் குறைவினைகளதும் தொகுப்பாகவே குறிப்பு வினை வடிவங்கள் உள்ளன என்போரும் உளர் (இசரயேல், மோ., *1976:90*). குறிப்பு வினை வினைச்சொல்லே என்போரும் உளர் எனினும், அதற்கு இலக்கணவழி ஆதாரங்கள் பலவீனமானவை.

எனது நோக்கம் குறிப்பு வினை பற்றிய வரைவிலக்கண, விளக்கக் கருத்து முரண்களுட் புகுவதல்ல. தனித்து நிற்கையிற் பெயர்ச்சொல்லாகக் கருதத்தக்க ஒரு சொல்லை வினைச் சொல்லாகவோ பயனிலையாகி ஒரு வினையை உணர்த்தவோ அனுமதிப்பது எது என்பதே எனது விசாரணை. குறிப்பு வினையை விவரித்த எவரும் அதை விளக்கியதாகத் தெரியவில்லை. எனவே குறிப்பு வாக்கியங்களின் இயல்பை விசாரிப்பதிலிருந்து தொடங்கலாம்.

## 4. குறிப்பு வாக்கியங்களின் இயல்பு

சில வினாக்களிற் தொடங்கிக் குறிப்பு வாக்கியங்களின் இயல்பை விசாரிப்போம்:

1. குறிப்பு வாக்கியம் தெரிநிலை வாக்கியத்தினின்று எவ்வாறு வேறுபடுகிறது?
2. குறிப்பு வாக்கியம் காலத்தை உணர்த்துமா?
3. குறிப்பு வாக்கியத்துக்கு வினைச்சொல் உண்டா?
4. குறிப்பு வாக்கியத்துக்கு வினைச்சொல் இருப்பின் அது எது?

### குறிப்பு வாக்கியம் தெரிநிலை வாக்கியத்தினின்று எவ்வாறு வேறுபடுகிறது?

குறிப்பு வாக்கியம் ஒன்றின் இருப்பைப் பற்றியது. தெரிநிலை வாக்கியம் பல்வகைப்படுமெனினும் அது நிகழ்வைக் கூறுவது. தொல்காப்பியம் உண்மையில் ஒரு பெயர்ச்சொல்லையே குறிப்பு என்கிறது. அப் பெயர்ச்சொல் வினையோடு சேர்த்துக் கருதக்கூடிய விகுதியொன்றைக் கொண்டுள்ளமையை விட்டால், அச் சொல்லுக்குத் தன்னளவில் வினைப் பண்பு இல்லை.

தொல்காப்பியம் உண்மையில் ஒரு பெயர்ச் சொல்லையே குறிப்பு என்கிறது. அப் பெயர்ச்சொல் வினையோடு சேர்த்துக் கருதக்கூடிய விகுதி யொன்றைக் கொண்டுள்ள மையை விட்டால், அச் சொல்லுக்குத் தன்னளவில் வினைப் பண்பு இல்லை.

எனவே வெளிப்பட ஒரு வினைச்சொல் இல்லாமையே குறிப்பு வாக்கியங்களைத் தெரிநிலை வாக்கியங்களினின்று வேறுபடுத்துகிறது.

ஆங்கில வாக்கியமொன்றில் எழுவாய், வினைச்சொல், செயப்படு பொருள் என்பன எவ் வரிசையில் வரலாமெனக் கட்டுப்பாடுண்டு. வரிசை மாற்றி எழுதின் வாக்கியத்தின் பொருள் மாறலாம் அல்லது வாக்கியம் பொருளற்றதாகலாம். ("The clock struck one" என்பதை "One struck the clock" என்றோ "One the clock struck" என்றோ "The clock one struck" என்றோ எழுதின் பொருள் மாறும். இவற்றிற் பின்னைய இரண்டும் வாக்கியமாகா. "Struck one the clock" என்றோ "Struck the clock one" என்றோ எழுதின் அவை பொருளற்றவை.

மாறாகத், தமிழில் "நாய் பூனையைத் துரத்திற்று" என்ற தெரிநிலை வாக்கியத்தைப், "பூனையை நாய் துரத்திற்று" "பூனையைத் துரத்திற்று நாய்" "நாய் துரத்திற்றுப் பூனையை" "துரத்திற்றுப் பூனையை நாய்" "துரத்திற்று நாய் பூனையை" என்றவாறு மாற்றின் அழுத்தத்தில்

வேறுபாடு ஏற்படலாமெனினும் பொருள் சிதையாது. ஏனெனிற், தமிழில் உள்ள வேற்றுமை உருபுகள் பெயருடன் இணைந்து எழுவாயை எழுவாயாயும் செயப்படுபொருளைச் செயப்படுபொருளாயும் பேணுகின்றன.

ஆயினும், குறிப்பு வாக்கியமொன்றின் சொல் வரிசை மாற்றம் வாக்கியத்தின் பொருளை மாற்றலாம். ("யானை கரியது" என்பதைக் "கரியது யானை" என மாற்றின் 'யானை கருநிறமானது' என்பதனிடத்திற் 'கருநிறமான பொருள் யானையாகும்' எனும் பொருள் அமைய இடம் மிகுதி.) குறிப்பு வாக்கியத்தில் எழுவாய் வேற்றுமை உருபு மட்டும் உள்ளமையே இதன் காரணம். ஆகும் என்ற விகுதியைச் சேர்த்து, "யானை கரியதாகும்" என எழுதின், வாக்கியம் தெரிநிலை வாக்கிய மாவதால் இச் சிக்கல் தவிர்கிறது. "கரியதாகும்" என்பது வினைச்சொல். ஆதலால் "யானை" மட்டுமே எழுவாயாக இயலும்.

"யானை கரியது ஆகும்" எனும் தெரிநிலை வாக்கியத்தில், "யானை கரியது" என்ற குறிப்பு வாக்கியத்திற் போற் சொல் வரிசைச் சிக்கல் இருக்கும். ("யானை கரியது ஆகும்" என்பதும் "கரியது யானை ஆகும்" என்பதும் "ஆகும் யானை கரியது" என்பதும் ஒன்றாகா. ஏனெனிற் பெயர்ச் சொற்களிரண்டும் எழுவாய் வேற்றுமை உருபுடையன. இதன் தாற்பரியத்தைப் பின்னரும் பார்ப்போம்.

வினைச்சொல் காலத்தை உணர்த்த வேண்டுவதாற், குறிப்பை வினையென ஏற்கும் நோக்கிலேயே தொல்காப்பி யத்துக்குப் பிந்திய இலக்கண நூல்கள் அது காலத்தை உணர்த்துமென வலிந்து கூறின என்பது என் ஊகம்.

**குறிப்பு வாக்கியம் காலத்தை உணர்த்துமா?**

"குறிப்பு வினையாவது, காலங்காட்டும் உறுப்பின்மையினாலே, காலம் வெளிப்படத் தெரிதலின்றிச் சொல்லுவோனது குறிப்பினாலே தோன்றும்படி, நிற்கும் வினையாம்" என்பது ஆறுமுக நாவலரின் விளக்கம் (ஆறுமுகநாவலர், *1993:115*).

ஆனால், ஒரு குறிப்பு வாக்கியம், ஆக மிஞ்சி, நிகழ்காலத்தையே உணர்த்தும். வேறு காலத்தை உணர்த்த இரு வழிகள் உள. காலத்தைக் குறிக்கும் ஒரு சொல்லைப் புகுத்தல் ("நேற்று யானை கரியது") அல்லது காலத்தை உணர்த்தும் ஒரு வினைச் சொல்லை அமைத்தல் (யானை கரியதாயிருந்தது). முதலாவதில் வாக்கியம் பொதுத் தன்மையை இழக்கிறது. (அதன்படி, யானை இன்று வேறு நிறமாயிருக் கலாம்.) இரண்டாவது வாக்கியம் குறிப்பு வாக்கியமல்ல.

"குறிப்பு (வினை)" என்பதன் பெயர்க் காரணம் "காலம் வெளிப்படத் தெரிதலின்றிச் சொல்லுவோனது குறிப்பினாலே தோன்றுதல்" எனப் பலர் கூறுவர் (சங்கரநாராயணன், கி., *2018:65-74*). எனினும் குறிப்பு (அல்லது குறிப்பு வினை) ஒரு பொருளைக் குறிப்பதனாலேயே அப் பெயருடையது என்பது கூடப் பொருந்தும்.

வினைச்சொல் காலத்தை உணர்த்த வேண்டுவதாற், குறிப்பை வினையென ஏற்கும் நோக்கிலேயே தொல்காப்பியத்துக்குப் பிந்திய இலக்கண நூல்கள் அது காலத்தை உணர்த்துமென வலிந்து கூறின என்பது என் ஊகம்.

குறிப்பு எக்காலத்துக்கும் உரியது என்பது செல்லும். ஆனாற் தன்னளவில் நிகழ்காலமன்றிப் பிற காலங்களை உணர்த்தாது.

**குறிப்பு வாக்கியத்துக்கு வினைச்சொல் உண்டா?**

காலத்தை உணர்த்தும் ஒரு சொல்லைப் புகுத்தலாற் குறிப்புக் காலம் உணர்த்தும் என்பது உண்மை. ஆயினுங் காலத்தை உணர்த்தல் மட்டுமே குறிப்பை வினைச் சொல்லாக்காது. ஏனெனிற் குறிப்பு செயலை உணர்த்துவதல்ல.

குறிப்பு வாக்கியம் ஒரு அடையாளத்தைக் கூறுமெனின் தெரிநிலை வாக்கியம் ஒரு சைகையைக் கூறும். பெயர்வின்றி ஒரு அடையாளம் சைகையாகாது.

எனவே தமிழின் குறிப்பு வாக்கியங்களைப் பிற மொழிகளில் அவற்றுக்குச் சமமான வாக்கியங்களுடன் ஒப்பிட்டுக் குறிப்பு வாக்கியங்கட்கு வினைச்சொல் உண்டா என விசாரிக்கலாம்.

காலத்தை உணர்த்தும் ஒரு சொல்லைப் புகுத்தலாற் குறிப்புக் காலம் உணர்த்தும் என்பது உண்மை. ஆயினுங் காலத்தை உணர்த்தல் மட்டுமே குறிப்பை வினைச் சொல்லாக்காது.

தமிழில் "இது ஒரு வீடு"

ஆங்கிலத்தில் "This is a house" (இது ஆகும் ஒரு வீடு = இது ஒரு வீடு ஆகும்)

சிங்களத்தில் "மெய நிவஸகி" (இது வீடொன்றாகும் = இது ஒரு வீடாகும்)

மலையாளத்தில் "இது ஒரு வீடாகும்"

ரஷ்ய மொழியில் "எதொ டொம்" (இது வீடு)

ஹிந்தியில் "யா ஏக் கர் ஹே" (இது ஒரு வீடாகும்)

வங்காளியில் "ஏதா ஏக்தா கரா" (இது ஒரு வீடு)

குறிப்பு: சிங்களத்தில் "இது ஒரு புத்தகம்" என்பது "மேக பொதக்" "இது புத்தகமொன்று" ("இது ஒரு புத்தகம்") என அமையும்.

இறந்தகாலத்திலும் எதிர்காலத்திலும் எல்லா மொழிகளிலும் "இது ஒரு வீடாயிருந்தது" "இது ஒரு வீடாயிருக்கும்" என்றவாறே வாக்கியங்கள் அமைவன. நிகழ்காலத்தில் மட்டும் சில மொழிகளில் (எப்போதுமில்லா விடினும் கணிசமாக) "ஆகும்" என்ற வினை (ஆங்கிலத்தில் is) தவறுகிறது.

**குறிப்பு வாக்கியத்துக்கு வினைச்சொல் இருப்பின் அது எது?**

குறிப்பு வாக்கியங்களில் "ஆகும்" என்ற வினையைச் சேர்த்து எழுதலால் வாக்கியத்தின் பொருளில் மாற்றமில்லை என்பதால், "ஆகும்" என்ற வினை தோன்றாமற் செயற்படுகிறது எனத் துணிந்து கூறலாம். சிங்களத்திற்கும் வங்காளிக்கும் ரஷ்ய மொழிக்கும் இவ்வாதம் பொருந்தும்.

எனினும் "ஆகும்" என்ற வினையைச் சேர்ப்பதாற் காலம் நிகழ்கால மாக உறுதிபடுகிறது. அல்லாவிடின் குறிப்பு வாக்கியம் காலமற்ற ஒரு அடையாளப்படுத்தலாகும்.

தமிழிற் தோன்றா வினைகள் பலகாலமாக இயங்குகின்றன என்பதை இங்கு கூறத் தகும்:

"எனக்குப் பசி" (பசி உள்ளது / பசி இருக்கிறது )

"அவருக்கு விளங்காது போல" (போலத் தெரிகிறது)

பின்வரும் உதாரணங்கள் முக்காலத்திலும் தோன்றா வினைகள் வருவதைக் கூறும்.

நாளை நண்பனின் திருமணம் (நடக்கும்)

நண்பன் இப்போது நித்திரை (யாக இருக்கிறான்)

அவன் நேற்றுக் கொழும்பில் (இருந்தான்)

எவ்வாறாயினும் தமிழ் இலக்கண நூல்கள் வாக்கியங்களில் வரக்கூடிய தோன்றா எழுவாயையோ அறியா எழுவாயையோ பேசுமளவுக்குத் தோன்றா வினையைப் பேசுவதில்லை. ஒரு வாக்கியத்தின் பயனிலையில் வினைச்சொல் இன்மையைப் பலர் பொருட்படுத்தாமைக்குக் குறிப்பு வினை என்ற கருத்தாக்கம் பங்களித்திருக்கலாம்.

**குறிப்பு வாக்கியமும் "ஆகும்'' என்ற வினையும்**

"குறிப்பு வினை" எனும் பதத்தை விடப் "பெயர்ப் பயனிலை" எனும் பதம் இலக்கணத்துக்குப் பொருந்தினும் "குறிப்பு வினை" என்பதற்கு மாற்றாகப் "பெயர்ப் பயனிலை" எனும் பதத்தை நாடுவோர் குறிப்பு வாக்கியங்களில் ஒரு தோன்றா வினை செயற்படுவதைக் கருதார். குறிப்பு வாக்கியங்கள் நிகழ்காலத் தோன்றா வினை வாக்கியங்களென்பது கூடப் பொருந்தும்.

"ஆகும்" என்ற பதத்திற்குச் சமமான வினையை ஏற்கும் மொழி களிலும் அவ் வினைச் சொல் தமிழிற் போல எக்காலத்துக்குமுரியது என்பது காணத்தக்கது. (உதாரணமாக, "This is a metal" எனும் ஆங்கில வாக்கியம் இப்போதிற்கு மட்டுமன்றி எப்போதிற்குமுரிய கூற்றாகும்.)

"ஆகும்" என்பதைக் குறிப்போடு சேர்த்து எழுதின் குறிப்பு வாக்கி யத்தின் தன்மை மாறாது. அதைத் தனித்து எழுதின் அவ்வாக்கியம் "ஆகும்" என்ற தெரிநிலை வினையையுடைய வாக்கியமாகும். அதை விட, "ஆகும்" என்ற வினைக்கு இருப்பைக் கூறலை விட வேறு பொருட்களும் உள்ளமை கவனிக்கத்தக்கது.

## 5. முடிவுகளும் பிற கருத்துகளும்

### முடிவுகள்

வெளிப்பட ஒரு வினைச்சொல் இல்லாமையே, குறிப்பு வாக்கியங்களைத் தெரிநிலை வாக்கியங்களினின்று வேறுபடுத்துகிறது.

குறிப்பு, வேறுபாடின்றி எக்காலத்துக்கும் உரியதாகலாம். அப்போது அது காலங் கடந்ததாகும். அல்லாத போது, அது நிகழ்காலமன்றிப் பிற காலங்களை உணர்த்தாது.

வெளிப்பட ஒரு வினைச்சொல் இல்லாமையாற் குறிப்பு வாக்கியம் வினைச்சொல் அற்றதாகாது. அதற்குத் தமிழிற் பிற இடங்கள் சிலதில் உள்ளவாறு ஒரு குறிப்பு வினை உண்டு.

"ஆகும்" என்ற வினையைக் குறிப்புடன் சேர்த்து எழுதின் மூல வாக்கியத்தின் பொருளுந் தன்மையும் மாறா. எனவே அதைக் குறிப்பு வாக்கியங்கட்குப் பொதுவான குறிப்பு வினை எனக் கொள்ளலாம்.

### பிற கருத்துகள்

தமிழில் வினைச்சொல் பற்றிய குழப்பங்கட்கு இலக்கண நூல்கள் வினைச்சொல்லைக் கையாளும் விதமும் ஒரு காரணமென்பது என் மதிப்பீடு. இது மேலும் விசாரிக்கத்தக்கது

தமிழில் வினைச்சொல் பற்றிய குழப்பங்கட்கு இலக்கண நூல்கள் வினைச் சொல்லைக் கையாளும் விதமும் ஒரு காரணமென்பது என் மதிப்பீடு.

வாக்கியங்களின் பிரதான கூறுகளாக எழுவாய், பயனிலை என்பனவும் பயனிலையுள் வினையும் செயப்படுபொருளும் உள்ளன. எழுவாயும் செயப்படுபொருளுமான பெயர்ச் சொற்களைப் பெயரடைகள் சிறப்பிக்கின்றன. வினையை வினையடைகள் சிறப்பிக்கின்றன.

வினையடைகளும் பெயரடைகளிற் பலவும் வினைச் சொற்களினின்று தோன்றுவன. ஒரு வகையிற், செயப்படுபொருளும் வினையடை போன்றதே. வினையினின்று தோன்றும் பெயரெச்சங்களும் வினையெச் சங்களும் வினைகளாகா. ஆயினும் அவற்றை எச்சவினைகளென அழைக்கும் மரபு தொடர்கிறது.

தனி வாக்கியத்தில் ஒரு வினைச்சொல் மட்டுமே இயலும். கூட்டு வினைகள் என்பவற்றிலும், இறுதியாக வரும் வினை தவிர்ந்த வினைச்சொற்கள் யாவும் வினையடைகளே. கூட்டு வாக்கியங்களில் ஒவ்வொரு வாக்கியக் கூறும் வினையை உடையன. ஆனாற் பெயரெச்சங் களும் வினையெச்சங்களும் எவ் வாக்கியமும் உணர்த்தும் நிகழ்வைக் கூறா. தனித்து அவற்றுக்கு வினைப் பண்பு இருப்பினும் ஒரு வாக்கியத்தினுள் அவை வினைகளாகா.

வினைச்சொல்லுக்கும் தனி வாக்கியத்துக்குமுள்ள உறவின் தனித்துவத்தை இலக்கண நூலோர் முதன்மைப்படுத்தின் வாக்கியங்களில் வினைச் சொல்லின் பயன்பாடும் விளக்கமும் எளிதாகும்.

## உசாத்துணைகள்

1. ஆறுமுக நாவலர் *(1993)*, தமிழ் இலக்கணம் *(மூல நூல்: இலக்கணச் சுருக்கம், 1886)*, சென்னை: முல்லை பதிப்பகம்.

2. இசரயேல், மோ. *(1976)*, இலக்கண ஆய்வு - வினைச்சொல், மதுரை: மதுரை பப்ளிஷிங் ஹவுஸ், ப.90.

3. சங்கரநாராயணன், கி. *(2018)*, "தமிழ்க் காப்பு இயத்தின் புதிய வினைக் கோட்பாடு உருவாக்கமும் கட்டமைப்பும்" இனம் (பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்), *3 (12)* ப. *65-74* (இணைய அடைவு: https://www.inamtamil.com/).

4. சண்முகம், செ.வை. *(1992)*, சொல்லிக்கணக் கோட்பாடு, தொல்காப்பியம், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

5. நுஃமான், எம்.ஏ. *(2013)*, தற்காலத் தமிழ் இலக்கணம், கல்முனை: வாசகர் சங்கம், (மீள்பதிப்பு).

6. புலியூர்க் கேசிகன் *(2013)*, தொல்காப்பியம் (முழுவதும்) தெளிவுரை, சென்னை: பாரி நிலையம், (மீள்பதிப்பு).

7. வீரகத்தி, க. *(1984)*, இலக்கண விதிமூலங்களும் விதிகளும், சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.